ஏழாம் வகுப்பு-தமிழ்
முதற்பருவம் வினா விடைத் தொகுப்பு
இயல் –1 (அமுதத் தமிழ்)

கவிதைப்பேழை : எங்கள் தமிழ்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.'நெறி' என்னும் சொல்லின் பொருள்------**விடை : அ.வழி**

2.'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : ஆ.குரல் + ஆகும்**

3.வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் **விடை : ஆ.வானொலி**

**குறு வினா**

**1.தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

தமிழ், அருள் வழி அறிவைத் தரும்.
கொல்லாமை பொய்யாமைக் கொள்கை கொண்டது.
அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும்.
அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.

**2.தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

பொருள் பெற யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

**சிறு வினா**

**1.எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

தமிழ், அருள் வழி அறிவைத் தரும்.
கொல்லாமை பொய்யாமைக் கொள்கை கொண்டது.
அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும்.
அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.
தமிழ்க்கற்றவர் பொருள் பெற யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

**சிந்தனை வினா**

**2.கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் மிகவும் தூய்மையானது.மிகவும் சுவையானது. மருந்தாகவும் பயன்படும்.தமிழும் அத்தகையதே! தமிழ் .
– எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

**கவிதைப்பேழை – ஒன்றல்ல இரண்டல்ல**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் **விடை –இ) பரணி**

2.வானில் --------கூட்டம் திரண்டால் மழை பொழியும். **விடை–ஆ) முகில்**

3.'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை–ஈ) இரண்டு + அல்ல**

4.'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை–அ) தந்து + உதவும்**

5.ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் **விடை–இ) ஒப்புமையில்லாத**

**குறுவினா**

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

தென்றலில் தேன் மணம் வீசும்.கனிகளும் தானியக் கதிர்களும் விளையும். நன்செய் நிலவளம் பலவற்றைக் கொண்டது.

**2.'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

முல்லைக்குத் தேர் தந்து புகழ் பெற்றவர் பாரி வள்ளல்.
புலவரின் சொல்லுக்குத் தன் தலையையே கொடுக்கத் துணிந்தவர் குமண வள்ளல்.

**சிறுவினா**

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

பரணி இலக்கியம்,பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை,திருக்குறள், சங்க இலக்கியங்கள் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

**உரைநடை உலகம் : பேச்சுமொழியும் எழுத்துமொழியும்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மொழியின் முதல்நிலை பேசுதல்,.....ஆகியனவாகும். **விடை ஆ)கேட்டல்**

2.ஒலியின் வரிவடிவம்....... ஆகும். **விடை.ஆ)எழுத்து**

3.தமிழின் கிளைமொழிகளில் ஒன்று **விடை : இ)தெலுங்கு**

4.பேச்சுமொழியை----என்றும் கூறுவர்.**விடை :ஆ)உலக**

**சரியா தவறா என எழுதுக.**

1.மொழி காலத்திற்கேற்ப மாறுகிறது. **விடை :சரி**

2.எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை :சரி**

3.பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **விடை :சரி**

4.எழுத்துமொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **விடை:தவறு**

5.பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத் தாழ்வு அவசியம். **விடை:சரி**

**குறு வினா**

**1.மொழின் இருவடிவங்கள் யாவை?**

1.பேச்சுமொழி 2.எழுத்துமொழி

**2.பேச்சுமொழி என்றால் என்ன?**

வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

**3.வட்டாரமொழி எனப்படுவது யாது?**

ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டாரமொழி என்பர்.

**சிறு வினா**

**1.பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

**பேச்சுமொழி**

1. சொற்கள் குறுகி ஒலிக்கும். எ.கா.நல்லாச் சாப்டான்
2. உணர்ச்சிக் கூறுகள் அதிகம்.
3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடம் உண்டு.
4. திருத்தமான மொழிநடையில் அமைகிறது.

**எழுத்துமொழி**

1. எழுத்துமொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும். எ.கா.நன்றாகச் சாப்பிட்டான்
2. உணர்ச்சிக் கூறுகள் குறைவு.
3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை.
4. திருத்தமான மொழிநடையில் அமைவதில்லை.

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**2.கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றனர்.

வாழும் இடத்தின் நிலஅமைப்பு, இயற்கைத்தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படும்.

அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பு குறையும் போது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அதுவே 'கிளைமொழி' என்பர்.

**சிந்தனை வினா**

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

வாழ்வோடு இணைந்து இலக்கியங்கள் எழுதப்படுவதாலும் நீதிகளைக் கூறுவதாலும் இன்றும் இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதாலும் இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்கின்றன.

**விரிவானம் :சொலவடைகள்(பொம்மலாட்டம்)**

**பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**முன்னுரை**

ஆளுக்கு ஒரு வேலை என்னும் பொம்மலாட்டக் கதையைக் காண்போம்.

**ஆளுக்கு ஒரு வேலை**

- சிறுகுடும்பம் ஒன்றுள்ளது.
- அக்குடும்பத்தில் உள்ளபையன் பள்ளி செல்லாமல் ஊர்சுற்றிக் கொண்டே இருப்பான்.
- யார் கூறினாலும் கேட்காத பிடிவாத குணம் கொண்டவன்.
- ஒரு நாள் அப்பாவும் அம்மாவும்,படிப்பின் அவசியத்தை எடுத்துக் கூறினர்.
- அவன் வேண்டா வெறுப்பாகப் பள்ளி சென்றான்.பள்ளியை விட்டு ஓடினான்.
- விளையாட யாராவது வருவார்களா? என்று பார்த்துக் கொண்டிருந்தான்.
- அப்பொழுது அந்த வழியாக எறும்பு, தேனீ,பொதிமாடு,ஆமை,முயல் ஆகியவற்றை ஒவ்வொன்றாக விளையாடக் கூப்பிட்டான்.
- அவை அனைத்தும் தனக்கு வேலை உள்ளதாகச் சொல்லி,அவை விளையாட மறுத்து விட்டன.
- பிறகு குட்டிச் சுவரில் அமர்ந்தான் . அது இடிந்து பூச்சி, எறும்பு, வண்டு ஆகியன உனக்குத்தான் வேலைஇல்லை,நாங்கள் சேர்த்த பொருளை எல்லாம் உடைத்து விட்டாயே!' என்றுச் சொல்லி அவனைக் கடித்தன.மனம் மாறினான்.
- தன் அம்மாவிடம்,உலகத்தில் உள்ள அனைத்துக்கும் வேலை உள்ளது. எனக்குப் படிப்பது தான் வேலை என்பதைப் புரிந்து கொண்டேன். இனி பள்ளிக்குச் செல்கின்றேன் என்றான்.

**முடிவுரை**

மாணவர்களுக்குப் படிப்பது மட்டும் தான் வேலை என்பதை இதன் மூலம் நாம் அறியலாம்.

**கற்கண்டு :குற்றியலுகரம், குற்றியலிகரம்**

**குறு வினா**

1.'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

குற்றியலுகரம் – குறுமை +இயல் +உகரம்
தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

2.குற்றியலிகரம் என்றால் என்ன?

முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

**கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிப் பற்று**

**முன்னுரை**

தாயும் தாய்மொழியும் உலகில் சிறந்தவை.தாய்மொழிப் பற்று பற்றி விரிவாகக் காண்போம்.

**தாய்மொழிப் பற்று**

- ✓ நமது எண்ணங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ள உதவுவது மொழியாகும்.
- ✓ குழந்தைக்குத் தாய் முதன் முதலில் சொல்லித் தரும் மொழியே தாய்மொழி. குழந்தைகளுக்குத் தாய்மொழி இயற்கையாகவே வரும்.
- ✓ உலகம் போற்றும் சாதனையாளர்கள் அவரவர் தாய்மொழியிலேயே செயல்களைச் செய்து சாதனை படைத்துள்ளனர்.
- ✓ பாரதியார்,காந்தியடிகள்,தாகூர் எனப் பலரும் படைப்புகளைத் தம் தாய்மொழியிலேயேதந்தனர்.
- ✓ வேற்று மொழி மோகம் கொண்டு அலையாமல் தாய்மொழி மீது பற்று வைக்கவேண்டும்.
- ✓ தாய்மொழி வழிக் கல்வி பெறுதலே சிறப்பு என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- ✓ தாய்மொழியிலேயே பயில வேண்டும்.

**முடிவுரை**

புரியாத மொழியில் படிப்பதை விட புரிந்த மொழியில் படிப்பதே சிறந்தது.

**இயல் – 2 (அணிநிழல் காடு)**

**கவிதைப்பேழை – காடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.வாழை, கன்றை----- **விடை: அ)ஈன்றது**

2.'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது--- **விடை: ஆ)காடு+எல்லாம்**

3.'கிழங்கு + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது--- **விடை : ஆ)கிழங்கெடுக்கும்**

**குறு வினா**

**1.காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

கார்த்திகை விளக்கை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

**2.காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

கண்கள் குளிர்ச்சி பெறும். பல பொருள்களையும் காய்கனிகளையும் தரும். குளிர்ந்த நிழல் தரும். விலங்குகளுக்கு உணவாகக் கனி தரும்.

**சிறு வினா**

**'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

பன்றிகள் கிழங்குகளைத் தோண்டி உண்ணும். நரி ஊளையிடும்.இலையைத் யானைகள் தின்றபடி நடக்கும்.காட்டில் சிங்கம், புலி,கரடி,சிறுத்தை ஆகிய விலங்குகள் எங்கும் அலைந்து திரியும்.

**சிந்தனை வினா**

காட்டை இயற்கை விடுதியாகக் கவிஞர் கூறக் காரணம் என்ன?

பூச்சிகள்,பறவைகள், விலங்குகள் ஆகியவற்றுக்குத் தங்குமிடம்,உணவு ஆகியவை காட்டில் இயற்கையாகவே கிடைக்கும்.எனவே,காட்டை இயற்கை விடுதியாகக் கவிஞர் கூறுகிறார்.

**கவிதைப்பேழை : அப்படியே நிற்கட்டும் அந்த மரம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது--- **விடை:ஆ)கோலிக்குண்டு**

2.'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை **விடை:அ)ஒட்டிய பழங்கள்**

3.'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது- **விடை : இ)பெயர்+ அறியா**

3.'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது-. **விடை : ஈ)மனம்+இல்லை**

4.'நேற்று + இரவு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது- **விடை ஆ)நேற்றிரவு**

**குறு வினா**

**1.நாவல் மரம் எத்தனை தலைமுறையாக அங்கு நின்றிருந்தது?**

நாவல் மரம் இரண்டு தலைமுறையாக அங்கு நின்றிருந்தது.

**2. சிறுவர்களுக்கு நாவல் பழம் கிடைக்க உதவியோர் யாவர்?**

காக்கை, குருவி, மைனா,பெயரறியாப் பவைகள், அணில்,காற்று

**சிறு வினா**

நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

ஐந்து வயதில் பார்த்த போதும், ஐம்பது வயதைத் தாண்டி பார்க்கின்ற போதும், தாத்தாவின் தாத்தா நட்டு வைத்த நாவல் மரம் அப்படியே இருக்கின்றது.நாவல்பழம் பழுக்கும் போது சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி ஏற்படும். கருநீலக்கோலிக்குண்டுகள் போல நாவல்பழங்கள் கிளைகளில் தொங்குவதைப் பார்க்கும் போதே நாவில் நீர் ஊறும்.காக்கை, குருவிஆகியவை உதிர்த்துவிடும் நாவல் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும். தங்கைகள் அக்காவுக்காக நாவல்பழம் பொறுக்குகின்றனர்.இரவில் வௌவால் கூட்டம் பழம் தின்னப் படை எடுக்கும்.
நாவல் மர நிழலில் கிளியாந்தட்டு விளையாடுவோம். நேற்று நண்பகல் என் மகன் விளையாடியதும் இந்த நாவல் மர நிழலில் தான்.

**சிந்தனை வினா**

**பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?**

குன்றுகளின் நடுவே மலை போல நாவல் மரம் கவிஞர் மனதில் நிற்பதாலும்,சிறு வயதில் இருந்து அவர் பார்வையில் இருப்பதாலும்பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தை அவர் பார்க்க விரும்பவில்லை.

**உரைநடை உலகம் : விலங்குகள் உலகம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.ஆசிய யானைகளில் ஆண் – பெண் யானைகளை வேறு படுத்துவது **விடை:ஆ)தந்தம்**

2.தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் **விடை:இ)முண்டந்துறை**

3.'காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--- **விடை: அ)காடு+ஆறு**

4.'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:ஈ)அனைத்து+உண்ணி**

5.'நேரம்+ ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது– **விடை : அ)நேரமாகி**

6.'வேட்டை+ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது **விடை:ஆ) வேட்டையாடிய**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு... **விடை :புலி**

2.யானைக் கூட்டத்திற்கு ஒரு௭..யானைதான் தலைமை தாங்கும். **விடை :பெண்**

3.கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன்...... **விடை அடர்ந்த முடிகள்**

**குறு வினா**

**1.காடு வரையறு.**

மரங்கள்,செடி,கொடிகள்,புல்,புதர்கள்,பூச்சியினங்கள், பறவைகள்,விலங்குகள் போன்ற பல உயிர்களின் வாழ்விடம் காடாகும்.மனிதனின் முதல் இருப்பிடம் காடு.

**2.யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகிறது ஏன்?**

யானைகள் செல்லும் வழிகளில் மனிதர்கள் குறுக்கிடும் போது,அவர்களைத் தாக்குகின்றன.

**3.கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?**

பழங்கள், தேன், உதிர்ந்த மலர்கள், காய்கள்,கனிகள், புற்றீசல், கறையான் என அனைத்தையும் உண்பதால் கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுகின்றது.

**4.மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**

1.புள்ளிமான் 2.சருகுமான் 3.மிளாமான் 4.வெளிமான்

**சிறு வினா**

**1.புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்டசெய்திகளைத் தொகுத்து எழுதுக.**

புலிகள் தனித்து வாழும் இயல்பு உடையன.ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குச் செல்லாது.கருவுற்ற புலியானது 90 நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் வரைப் பெற்றெடுக்கும்.அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும்.அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளைப் பிரித்து அனுப்பிவிடும்.

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**சிந்தனை வினா**

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**

மழை குறையும். நல்ல நிலம் பாலை நிலமாக மாறி விடும். காட்டுயிரிகள் வாழ்விடம் அழியும்.நீர்த் தட்டுப்பாடு ஏற்படும்.உணவுப்பொருள்தட்டுப்பாடு ஏற்படும்.

**விரிவானம்: இந்திய வனமகன்**

**ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?**

**முன்னுரை**

ஜாதவ்பயேங் கடின உழைப்பால் ஒரு காட்டை எப்படி உருவாக்கினார் ? என்பதை இக்கட்டுரையில்காண்போம்.

**காடு உருவாதல்**

- பிரம்மபுத்திரா ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டது.
- மரங்கள் இல்லாத தீவில் பாம்புகள் கரை ஒதுங்கின.சில பாம்புகள் இறந்தன.
- இது ஜாதவ்பயேங்கை பாதித்தது.ஊர் மக்கள் தீவில் மரங்கள் இல்லாதது தான் காரணம் என்றனர்.
- அங்கு மரம் வளர்க்க நினைத்ததார்.அதனை யாரும் ஏற்கவில்லை.அவர் அங்கு விதைக்கத் தொடங்கினார்.
- ஆனால்அவைகள் முளைக்கவில்லை.வனத்துறை சொன்னது போல மூங்கில் மரங்களை வளர்க்க தொடங்கினார். அவை வளர ஆரம்பித்தது. மகிழ்ச்சியடைந்தார்.
- பேராசிரியர் ஜாதுநாத் அவர்கள் சொன்ன படி மண்புழுவுடன் சிவப்புக் கட்டெறும்பை மண்ணில் விட்டார். மண்ணின் தன்மை மாறி புல்லும் மரங்களும் வளரத்தொடங்கின.
- மரங்களில் விளைந்த பழங்களை உண்டு அதன் கொட்டைகளை விதையாகச் சேமித்து வைத்து விதைத்தார். கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை மரங்களுக்கு உரமாக்கினார்.
- மரங்கள் பெருகி வளர்ந்து,அத்தீவு பெரிய காடானது. பாம்புகள் கழுகுகள்,யானைகள் காண்டாமிருகங்கள், புலிகள் ஆகியவை வரத்தொடங்கின.

**முடிவுரை**

ஜாதவ்பயேங் போல காட்டை உருவாக்குவோம். இந்திய வனமகன் வழியில் நாமும் செல்வோம்.

**கற்கண்டு : நால்வகைக்குறுக்கங்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.வேட்கை என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு--- **விடை: ஆ)ஒன்று**

2.மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல்--.
**விடை:ஈ)பணம் கிடைத்தது**

3.சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது----
**விடை:ஆ)ஔகாரக்குறுக்கம்**

**குறுவினா**

**1.ஔகாரம் எப்போது முழுமையாக ஒலிக்கும்?**

ஔ எழுத்து தனித்து வரும் இடங்களில் தன்னுடைய இரண்டு மாத்திரையில் முழுமையாக ஒலிக்கும்.

**2.சொல்லின் முதல், இடை,கடை ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?**

முதல்- 1மாத்திரை,இடை- 1 மாத்திரை,கடை- 1 மாத்திரை

**3.மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக**

1.வலம் வந்தான் 2.போன்ம்

**கடிதம் எழுதுக.**

**நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

**நண்பனுக்குக் கடிதம்**

10,தமிழ் நகர்,
சேலம்-3
நாள்

**அன்பு நண்பா!**

உன் உயிர் நண்பன் எழுதும் கடிதம்.நலம் நலம் அறிய விரும்புகின்றேன்.நாங்கள் சென்னைக்குச் சுற்றுலா சென்றோம்.மாமல்லபுரம்,உயிரியியல்பூங்கா, மெரினாகடற்கரை,பாம்புப் பண்ணை ஆகிய இடங்களுக்குச் சென்றோம்.மிகவும் அருமையாக இருந்தது.அடுத்த வாரம் நேரில் வரும் போது இன்னும் விளக்கமாகக் கூறுகின்றேன்.அன்புடன் முடிக்கின்றேன்.

**இப்படிக்கு**
**உயிர் நண்பன்**
------------

**உறைமேல் முகவரி**

**பெறுநர்**

ச.சிற்பி
18,பாண்டியன் நகர்,
மதுரை-1

**வாழ்வியல் : திருக்குறள்**

**சரியான விடையைத் தேர்க.**

1) வாய்மை எனப்படுவது
**விடை:தீங்குதராத சொற்களைப் பேசுதல்**

2)-- --செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.
**விடை:பொறாமை உள்ளவன்**

3)'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது- **விடை:பொருள்+ செல்வம்**

4)'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது விடை :யாது+எனின்

5.தன்+நெஞ்சு என்ற சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது- **விடை : ஆ)தன்னெஞ்சு**

6.தீது+உண்டோ என்ற சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது **விடை : அ)தீதுண்டோ**

**சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்துக.**

அ)பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.
- 1.ஆ)பொருள் வரும் வழிகளை அறிதல்.

ஆ)பொருள் வரும் வழிகளை அறிதல்.
-2. ஈ)பொருள்களைச் சேர்த்தல்.

இ)சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
-3.இ)சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்

ஈ)பொருள்களைச் சேர்த்தல்.
-4.அ)பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.

**குறு வினா**

**1.எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?**

பொய்சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் மனமே அவரைச் சுடும்.

**2.வாழும் நெறி யாது?**

மனத்தில் பொறாமை இல்லாது வாழ்தலே வாழும் நெறி ஆகும்.

**3.உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?**

உள்ளத்தில் பொய்யில்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவர்.

**இயல் -3 (நாடு அதை நாடு)**

**கவிதைப்பேழை: புலி தங்கிய குகை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.'யாண்டு ' என்ற சொல்லின் பொருள்- **விடை:எங்கு**

2.'யாண்டுளனோ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:யாண்டு+ உளனோ?**

3.'கல் அளை' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது-. **விடை:கல்லளை**

**குறு வினா**

**1.தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

தம் வயிற்றுக்குத் தாய் 'புலி தங்கிய குகை'யை உவமையாகக் கூறுகிறார்.

**சிறு வினா**

**1.தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

தூணைப் பற்றிக் கொண்டு, எதுவும்தெரியாதவள் போல நீ'உன் மகன் எங்கே ? ல் என்று என்னைக் கேட்கின்றாய். அவன் எங்கு இருக்கின்றான் என்று எனக்குத் தெரியாது. ஆனால் 'புலி தங்கிய குகை' போல அவனைப் பெற்ற வயிறு என்னிடம் உள்ளது.அவன் இங்கு இல்லை ஆனால் போர்க்களத்தில் இருக்கலாம். போய்க் காண்பாயாக! என்று தாய் கூறினாள்.

**சிந்தனை வினா**

**தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

இருள் நிறைந்த குகையில் புலி இருப்பது போல், இருள் நிறைந்த வீரம் மிக்க கருவறையில் தன் மகன் உறங்கி வளர்ந்தான்.புலி குகையை விட்டு வேட்டைக்குச் செல்வது போல பகைவர்களை வேட்டையாடுவதற்கு மகன் போர்க் களம் சென்று இருக்கின்றான்.அதனால் தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறார்.

**கவிதைப் பேழை : பாஞ்சை வளம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.ஊர்வலத்தின் முன்னால் அசைந்து வந்தது. **விடை:இ)வாரணம்**

2.பாஞ்சாலங்குறிச்சியில்----------நாயை விரட்டிடும். **விடை:அ)முயல்**

3.மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது--- **விடை:ஈ)மாடிவீடு**

4.பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை :ஆ)பூட்டும் +கதவுகள்**

5.'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது- **விடை : அ)தோரணம் +மேடை**

6.வாசல் +அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்---- **விடை : ஆ)வாசலங்காரம்**

**பொருத்துக.**

விடை:

பொக்கிஷம் – செல்வம்
சாஸ்தி – மிகுதி
விஸ்தாரம் – பெரும்பரப்பு
சிங்காரம் – அழகு

**குறு வினா**

**1.பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**

பாஞ்சாலங்குறிச்சி நகரில் பல சுற்று கோட்டைகள் இருக்கும்.அவை மதில்களால் சூழப்பட்டவையாக இருக்கும்.

**2.பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**

பூஞ்சோலை,சந்தனமரச்சோலை,ஆறுகள்,நெல் வயல்கள்,பாக்குத் தோப்புகள் ஆகிய இயற்கை வளம் கொண்டது பாஞ்சாலங்குறிச்சி.

**சிறு வினா**

**1.பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**

வீடுகளில் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாக இருக்கும்.வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்ததாகவும் இருக்கும்.

**2.பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**

பாஞ்சாலங்குறிச்சியில் முயலானது தன்னைப் பிடிக்க வரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டும்.பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று தண்ணீரைக் குடிக்கும். மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**சிந்தனை வினா**

நாட்டுப் புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் யாது?

மாவீரன் கட்டபொம்மன் யாருக்கும் பயப்படாத வீரம் நிறைந்தவர்.ஆங்கிலேயரை கடுமையாக எதிர்த்து விடுதலைக்காகப் போராடினார்.அதனால் மக்களால் ஈர்க்கப்பட்டார்.அதனால் நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படுகின்றார்.

**உரைநடை உலகம் :தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.முத்துராமலிங்கத்தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் **விடை:இ)சாயல்குடி**

2.முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் **விடை : ஆ) நேதாஜி**

3.தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர்--- **விடை : அ)திரு.வி.க**

**குறுவினா**

**1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?**

வீரப் பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் பேச்சால் எத்தனையோஅறிவாளிகளைஉண்டாக்கியவர். உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித் துணிச்சல் பெற்றவர்.சுத்தத் தியாகி.- பெரியார்

**2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?**

ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சி ஏற்படும் படி வீர உரையாற்றினார். அவரது பேச்சைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக எழுந்தனர். இதனால், அவரைப் பலமுறை ஆங்கில அரசு கைது செய்தது.

**3.முத்துராமலிங்கர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.**

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல்,சோதிடம், மருத்துவம் ஆகிய பலதுறை ஆற்றல் உடையவராக விளங்கினார்.

**சிறு வினா**

**1.நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.**

நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார், அவரைத் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முத்து ராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.

**2.தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராக இருந்தார்.மதுரையில் இருந்த நூற்பாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார்.

சிந்தனைவினா

**சிறந்த தலைவருக்குரிய பண்புகள்எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பொதுநலம்,அன்பு,அருள்,நேர்மை,தன்னம்பிக்கை, பேச்சாற்றல்,கடின உழைப்பு- ஆகியன சிறந்த தலைவருக் குரிய பண்புகளாக நாங்கள் கருதுகின்றோம்.

**விரிவானம்-கப்பலோட்டிய தமிழர்**

1.வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாற்றாகச் சுருக்கி எழுதுக.

**முன்னுரை**

வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாற்றாகச் சுருக்கிக் காண்போம்.

**வ.உ.சிதம்பரனார்**

- ஆங்கிலேயர் ஆதிக்கத்துப் பின்னர் இந்தியக் கப்ப ல்களில் ஆங்கிலக் கொடி பறந்தது.
- அக்கப்பலில் மக்கள் கூலிகளாக வேலை செய்தனர்.சுதேசக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சிதம்பரனார் உருவாக்கினார்.
- இக்கப்பல் முதன் முதலில் கொழும்பு நோக்கிச் சென்றது.
- சுதேசக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் வீழத்தொடங்கியது.
- அதனால் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரை பயமுறுத்தினர்.
- ஆங்கில அரசு வ.உ.சிதம்பரனாரைச் சிறையில் அடைத்தது.சிறையில் செக்கிழுத்தார்.
- சிறையில் கைத்தோல் உரிய கடும்பணி செய்தார்.
- செந்தமிழும் கன்னித் தமிழும் கண்ணீரைப் போக்கியது.ஆங்கில நூல் ஒன்றை'மனம் போல் வாழ்வு' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார்.
- மெய்யறிவு, மெய்யறம் முதலிய சிறு நூல்களைப் படைத்தார்.
- சிறைவாழ்வு முடிந்து வ.உ.சிதம்பரனார் வெளியில் வந்த போது சுதேசக் கப்பலைக் காணாமல் வருத்தம் அடைந்தார்.

**முடிவுரை**

வ.உ.சிதம்பரனார் கடற்கரையில் சுதந்திரம் எப்போது வருமோ? என்று ஏங்கி நின்றார்.

**கற்கண்டு : வழக்கு, போலி**

**பொருத்துக.**

1.பந்தர் – கடைப்போலி
2.மைஞ்சு – முதற்போலி
3.அஞ்சு – முற்றுப்போலி
4.அரையர் – இடைப்போலி

**குறுவினா**

1.வழக்கு என்றால் என்ன?

முன்னோர்கள் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

2.தகுதி வழக்கு வகைகள் யாவை?

தகுதி வழக்கு மூன்று வகைப்படும். இடக்கரடக்கல், மங்கலம்,குழூஉக்குறி

3.வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது. – இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.

வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது.
– இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல் : நஞ்சு
சரியான சொல் : நைந்து

## பொதுக்கட்டுரை
## நான் விரும்பும் தலைவர் – பெரியார்

**முன்னுரை**

பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட பெரியாரே! நான் விரும்பும் தலைவர் ஆவார்.

**பெரியார் வாழ்வு**

- ஈரோடு நகரில் பெரியார் பிறந்தார். தொடக்கக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக் கொண்டார். .
- கேரளத்தில் வைக்கம் ஊரில் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். அதனால் வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.
- பெரியார் சுயமரியாதைஇயக்கம்தொடங்கினார். இந்த இயக்கத்தின் வாயிலாக சாதி ஏற்றத் தாழ்வு போக்குதல், தீண்டாமை ஒழித்தல்,மூடநம்பிக்கை ஒழித்தல் ஆகியவற்றைச் செய்தார்.பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்.

**கவரக் காரணம்**

- ✓ எளிமையான வாழ்வு
- ✓ சுயமரியாதை
- ✓ பெண்ணுரிமை பேசுதல்

–ஆகிய காரணங்களால் பெரியாரை விரும்புகின்றேன்.

**முடிவுரை**

பெரியாரைப் போற்றுவோம்.அவரின் வழி நடப்போம்.

ஆக்கம்

ச.சேட்டு மதார்சா
ப.ஆ–தமிழ்
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா பள்ளி,
ஈரோடு–638 001.
அலைபேசி 8883681115